திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் அவர்களே, உயர்நீதி மன்றத்தின் பரிந்துரையை ஏற்றுக் கொண்டு, இந்த அரசு மாவட்ட முன்சீப்பின் அதிகார வரம்பை ரூ. 5,000-லிருந்து ரூ. 15,000 ஆக உயர்த்தியது. அவ்வாறு உயர்த்தியதன் காரணமாக மாவட்ட முன்சீப் நீதிமன்றங்களில் ஏகப்பட்ட வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு, அவ்வளவும் இன்றைக்கு தேங்கியிருக்கின்றன. எனவே, இந்த அதிகார வரம்பை ரூ. 10,000 ஆகக் குறைத்தால், இந்த வழக்குகள் விரைவாக பைசலாகும். எனவே, இதைக் கருத்தில் கொண்டு அரசு இந்த அதிகார வரம்பை ரூ. 10,000 ஆகக் குறைக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நீதிமன்றம் மாவட்டத்திலுள்ள உரிமையியல் நீதிமன்றத்தின் அதிகார வரம்பை ரூ. 20,000 அல்லது ரூ. 25,000 வரை உயர்த்தலாம் என்று அரசுக்குப் பரிந்துரை செய்தது. ஆங்கு வழக்கறிஞர்கள் சப்-ஜட்ஜ் கோர்ட்டில் இருக்கக் கூடிய வழக்குகளையெல்லாம் விரைவாக நடத்துகின்ற திறமை வழக்கறிஞர்களுக்கு இல்லாது போகும் என்று அரசு உயர்நீதி மன்றத்திற்குத் தெரிவித்த பிறகு, ரூ. 15,000 ஆக அது குறைக்கப்பட்டிருக்கிறது. வழக்கறிஞர்களும் தாமதத்திற்குக் காரணம் என்பது உயர்நீதி மன்றத்தின் கருத்து. இது குறித்து உயர்நீதி மன்றம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

அவினாசியில் நிரந்தர இரண்டாம் வகுப்பு நீதிமன்றம் அமைத்தல்.

70—(*வினா எண் 9829) திருமதி பி. லட்சுமி : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அவினாசியில் நிரந்தரமாக இரண்டாம் வகுப்பு நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு உண்டா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவினாசியில் நிரந்தரமான இரண்டாம் வகுப்பு குற்றவியல் நீதிமன்றம் அமைப்பதற்கான செயற் குறிப்பு ஏதுமில்லை.

திருமதி பி. லட்சுமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவினாசியில் நிரந்தரமான இரண்டாம் வகுப்பு குற்றவியல் நீதிமன்றம் அமைப்பதற்கான செயற் குறிப்பு ஏதுமில்லை என்று சொன்னார்கள். எனவே, முன்சீப் கோர்ட்டு அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1987 மார்ச் 5]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவா அவர்களே, ஏற்கனவே ஒவ்வொரு வட்டத்திற்கும் ஒரு குற்றவியல், உரிமையியல் நீதிமன்றம் அமைக்கப்பட வேண்டும் என்ற நோக்கோடு அரசு முடிவெடுத்து, அதற்கான அறிக்கையை உயர்நீதிமன்றத்திடம் கேட்டிருக்கிறது. அவினாசியைப் பொறுத்தவரைக்கும் அங்கே குற்றவியல் நீதிமன்றம், உரிமையியல் நீதிமன்றம் தேவை என்று அரசு கருதுகிறது. மேட்டுப்பாளையத்திலிருந்து அவினாசி தொலை தூரத்தில் இருக்கின்ற காரணத்தினால், மக்களுடைய இன்னலைக் குறைக்க அந்தப் பகுதியில் ஒரு நீதிமன்றம் இருக்க வேண்டும் என்று கருதி, உயர்நீதி மன்றத்திடம் அரசு ஒரு தாக்கீதைக் கேட்டிருக்கிறது. அவர்கள் மாவட்ட நீதிபதியிடம் அதற்கான தகவலைக் கேட்டிருக்கிறார்கள். அது வந்ததற்குப் பிறகு இது குறித்து ஆய்ந்து அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மேட்டுப்பாளையத்தில் இருக்கின்ற இரண்டாம் நிலை சப்-மாஜிஸ்திரேட் வாரத்திற்கு மூன்று நாட்கள் அவினாசிக்குச் சென்று விடுகின்ற காரணத்தினால், மேட்டுப்பாளையம் மக்களுக்கு அது பாதிப்பாக அமைந்து விடுகிறது. எனவே, அவினாசியில் விரைவில் ஒரு இரண்டாம் நிலை சப் மாஜிஸ்திரேட்டு கோர்ட் ஏற்படுத்த வேண்டும். மேட்டுப் பாளையம் ஒரு தாலுகா தலைநகரமாகவும், அது பெரும் மக்கள் தொகை கொண்டிருக்கின்ற நகரமாகவும் இருப்பதால், அங்கே ஒரு சப்-டிவிஷனல் மாஜிஸ்திரேட் கோர்ட்டு அமைப்போமேயானால், மேட்டுப்பாளையத்திலிருந்து 70 கிலோ மீட்டர் சென்று திருப்பூரில் வழக்கு நடத்துகின்ற குறையைத் தீர்க்க முடியும். இது குறித்து நான் ஏற்கனவே ஒரு கோரிக்கை வைத்திருக்கிறேன். எனவே, விரைவில் மேட்டுப்பாளையத்தில் ஒரு சப்-டிவிஷனல் மாஜிஸ்திரேட் கோர்ட்டை அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னதுபோல், அவினாசியில் விரைவாக ஒரு குற்றவியல் நீதிமன்றமும், உரிமையியல் நீதிமன்றமும் வருவது தேவை என்பதை உயர்நீதி மன்றத்திடம் அரசு தெரிவித்து, உயர்நீதி மன்றம் மாவட்ட நீதிபதியின் அறிக்கையைக் கேட்டிருக்கிறது. அந்த அறிக்கை வந்த பிறகு, உடனடியாக அதற்கான நடவடிக்கைகள், முயற்சிகள் மேற்கொள்ளப்படும். மேட்டுப்பாளையத்தில் சப்-டிவிஷனல் மாஜிஸ்திரேட்டு கோர்ட் தேவை என்பதை உணர்ந்து, அது சம்பந்தமான தாக்கீது தர உயர்நீதி மன்றத்திடம் அரசு கேட்டிருக்கிறது. அதற்கான தகவல்கள் வந்தவுடன், தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ச. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்ககிரி மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் தற்போது திருச்செங்கோட்டில் செயல்பட்டு வருகிறது. அந்த நீதிமன்றத்தை, சங்ககிரிக்கு அரசு எப்போது கொண்டுவரும்? நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் சங்ககிரிக்கு வருகை தர இருப்பதால் அதனை முன்னிட்டாவது இந்தத் திட்டம் விரைவாகச் சேர்க்கப்படுமா?

(முற்பகல் 10-30)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்ககிரிக்கு சப்-டிவிஷனல் கோர்ட் ஏற்கெனவே, சென்ற ஆண்டே, அரசு தந்திருக்கிறது. ஒவ்வொரு வட்டத்திற்கும் ஒரு நீதிமன்றம் தரவேண்டுமென்ற முடிவை அரசு எடுத்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சங்ககிரிக்கு நீதிமன்றம் தேவை என்பதற்காக திருச்செங்கோட்டில் இருப்பதை எடுத்து அங்கே போடுவதால் பிரச்சினை தீர்ந்துவிடாது. சங்ககிரிக்குத் தனியாக நீதிமன்றம் தர அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. ஆர். தியாகராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் புரட்சித் தலைவருடைய காலத்திலே எல்லா இடங்களிலும் நீதிமன்றங்கள் தந்துவருகிறார்கள் என்று சொன்னார்கள். பண்டைய காலத்திலிருந்து விருத்தாசலத்திலிருந்து வருகிற சப்-கோர்ட்டும், முன்சீப் கோர்ட்டும் 15 ஆண்டுகளாக இடம் இல்லாமல் வாடகைக் கட்டடத்திலேதான் இருந்துவருகின்றன. அது விஷயமாக அமைச்சரிடத்திலே ஏதாவது குறிப்பு இருந்தால் அதைத் தெரிவிக்க இயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றங்களுக்கு நிதி ஒதுக்கும்போது கோர் செக்டார் என்ற பிரத்தியேக பிரிவின் கீழ் எடுத்துக் கொள்வது இல்லை. நீதிபரிபாலனத்திற்காக ஒதுக்கப்படுகிற தொகை மிகக் குறைவாகத்தான் இருக்கிறது. மாநில அரசு வருவாயிலிருந்து அது ஈடுகட்டப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டிலிருந்து ஓரளவுக்கு இதற்காக அதிகமாக நிதியை ஒதுக்கி இப்படி இடிந்து விழுகிற நிலையில் இருக்கிற கட்டடங்களுக்கு நிதி ஒதுக்குகிறோம். மத்திய அரசும் அதிகமாக இதற்கு நிதி ஒதுக்கக்கூடிய முறையிலே இதை கோர் செக்டாரிலே சேர்க்க வேண்டுமென்ற கருத்து அமைச்சர்கள் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு பிரதம அமைச்சர் அவர்களிடத்திலேயும் இதுபற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. மத்திய அரசு ஒதுக்குகிற நிதியைப் பொறுத்து மாநில அரசு இதிலே தக்க நடவடிக்கை எடுக்கமுடியும்,